Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 149/2024 PW-7**

Name : கலைச்செல்வி
Father / Husband name : ராமலிங்கம்
Village : திட்டக்குடி
Age : 49

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.03.2026

Accused present. Defence counesl present. HC 711 present.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கடலூர் மாவட்டம் திட்டக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி செய்கிறேன். கடந்த 29.06.2023 ந்தேதி நான் திண்டிவனம் காவல் வட்ட ஆய்வாளராக பணியிலிருந்தபோது ஒலக்கூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கலைமணி பதிவு செய்த குற்ற எண் 158/2023, U/s. 279,304(A) IPC ன் படி வழக்கு பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்தார். அதனை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் காலை 11 மணிக்கு சம்பவயிடமான கூச்சிக்கொளத்தூர் ஜன்சன் அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் செல்வம் மற்றும் கணபதி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தும் சாட்சிகள் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமுலம் பதிவு செய்தேன். **அவைகள் முறையே அ.சா.ஆ. 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் 13.00 மணிக்கு திண்டிவனம் அரசு மருத்துவமனையின் சவக்கிடங்கு சென்று இவ்வழக்கில் இறந்துபோன குப்புசாமி த/பெ சாமிக்கண்ணு என்பவரின் பிரேதத்தின் மீது 14.30 மணி வரை சவகிடங்கு முன்பு சாட்சிகள் மற்றும்

பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை முடித்து பிணக்கூராய்வுக்காக தலைமைக்காவலர் காளிதாஸ் என்பவரிடம் வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை ஒப்படைத்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் அருள்தாஸ், அருள், ஆரோக்கியடெனியல், அருள், மரியஜோசப் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 03.07.2023 அன்று காலை 10.15 மணிக்கு காவல் நிலையம் முன்பு ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். எதிரி ஆஜர் செய்த வாகனம் TN 19 T 9965 YAMAHA FZ RG O72 என்ற இருச்சக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சுந்தர்ராஜன் அவர்களை விசாரித்து ஆய்வறிக்கை பெற்றேன். **அந்த ஆய்வறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் இந்த வழக்கில் இறந்துபோன குப்புசாமியின் பிரேதத்தில் பிரேத பரிசோதனை செய்த திண்டிவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் ஸ்ரீனிவாசன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 9 அக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 03.07.2023 அன்று வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது U/s. 279,304(A) IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.1 சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லும் நபர்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் கூச்சிக்கொளத்தூர் பேருந்து நிறுத்தம்

அருகில் என்றால் சரிதான். மேற்படி பேருந்து நிறுத்தத்தை மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சம்பவயிடம் பேருந்து நிறுத்தம் என்பதால் கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான், விபத்து நடந்த நேரம் காலை 6.15 மணி என்பதால் கூட்டம் இல்லை. இறந்த நபரை ரோட்டை கடக்கும்போது விபத்து நடந்தது என்றால் சரியல்ல, ரோட்டை முழுவதுமாக கடந்து பேருந்து நிறுத்ததிற்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டது. இறந்த நபருக்கு 75 வயது இருக்கும் என்றால் சரியல்ல, 70 வயது. இந்த வழக்கில் சிவிப்ட் கார் சம்மந்தபட்டதாக எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் சிசிடிவி பதிவுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் எதிரியை அடையாளம் காட்டுவதாக வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் எனது விசாரணையில் சம்பவ சமயத்தில் திண்டிவனம் செல்வதற்காக நின்றதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் எனது விசாரணையில் சம்பவ சமயத்தில் டீக்கடையில் டீக்குடிப்பதற்காக நின்றதாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை. புகாரை யார் எழுதியது என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் எனது விசாரணையில் புகாரை எழுதியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நெடுஞ்சாலை என்பதால் தொடர்ச்சியாக வாகனங்கள் வரும்யிடம், அந்தப்பகுதியில் அடிக்கடி விபத்து ஏற்படும் என்றால் சரிதான். பொதுவாக வயதானவர்கள் மேற்படி சாலையை கடப்பது சிரமம் என்றால் அது அந்த நபரை பொறுத்தது. புகாரில் அடிப்பட்டவரின் பெயர் குப்பன் என உள்ளது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் குப்புசாமி என உள்ளது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் பெயர் மாறியுள்ளது என்றால் இறந்த நபரின் பெயர் குப்புசாமி, ஊரில் வழக்கமாக குப்பன் என்று சொல்வார்கள். வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் காலதாமதமாக நீதிமன்றம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சம்பவத்தை உண்மையாக நேரில் பார்த்த அந்நிய

சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் விபத்தை நேரில் பார்க்கவில்லை, இறந்தவரின் உறவினர்கள் என்பதால் சம்பவத்தை பார்த்ததாக பொய்யான சாட்சியம் அளிக்கிறார்கள என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறான அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி** - விபத்தில் சம்மந்தப்பட்ட இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளர் பெயர் என்ன என்றால் முகமதுஅப்சல் ஆவார். முகமதுஅப்சல் அவர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. எதற்காக வாகனத்தின் உரிமையாளரை விசாரிக்கவில்லை என்றால் விபத்தில் சம்பந்தப்பட்ட சேதம் அடைந்த வாகனத்தை எதிரி தன்னிச்சையாக காவல் நிலையத்தில் ஒப்படைத்ததால் உரிமையாளரை விசாரிக்கவில்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.